கூடுதல் மாவட்ட நீதிமன்றம். விருதுநகர்

அ.வ.எண்.67-2021

வாசா.3

நாள்: 02.03.2023.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : எனது தம்பி வாதியும் அவரது மனைவியும் ரியல் எஸ்டேட் தொழிலும், சீட்டு பிடிக்கும் தொழிலும் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இருவரையும் எனக்கு தெரியும். அவர்களுடன் பேசி பழகியதில்லை. வாதியின் மனைவிக்கும், 2ம்பிரதிவாதிக்கும் இடையே எவ்விதமான நட்பு இருந்தது என்று எனக்கு தெரியாது. வாதிக்கு பதிமூன்று இலட்சம் கடன் கொடுக்க வசதி வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. 2ம்பிரதிவாதி, வாதியின் மனைவிக்கு சிலரை சீட்டில் சேர்த்து அறிமுகம் செய்தார் என்றால் அவர்கள் சீட்டை எடுத்துக்கொண்டு பணம் செலுத்தாமல் தலைமறைவாகிவிட்டார் என்றும் அந்த பணத்தை பிரதிவாதியிடம் கேட்டும் கொடுக்காத காரணத்தினால் வாதி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி வா.சா.ஆ.1 புரோ நோட்டில் தமிழில் கையொப்பம் செய்தாரா ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தாரா என்று சரியாக தெரியவில்லை. நானும், வாதியும், வாதியின் மைத்துனர் பாஸ்கரன் மற்றும் வா.சா.2 ஆகிய நான்கு பேரும் சேர்ந்து பிரதிவாதிகளின் கையொப்பங்களை போர்ஜரி செய்து வா.சா.ஆ.1 புரோ நோட்டை உற்பத்தி செய்தோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் இருவரையும் எனக்கு எந்த காலத்திலும் தெரியாது என்றும் வழக்கு போட்ட பின்பு தான் அவர்களை தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. வாதி எனது உடன் பிறந்த சகோதரன் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்த காலத்திலும் வாதியிடமிருந்து கடன் தொகை ருபாய் பதிமூன்று இலட்சம் கடன் பெறவில்லை என்றும் அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.1 புரோ நோட் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் இருவருக்கும் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.